**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 18 ம்நாள்

**இ.ம.எண். 4/2025**

**in**

**அ.வ.எண். 213/2021**

1. கெட்டிமுத்து கவுண்டர் (இறந்துவிட்டார்)
2. ஈஸ்வரமூர்த்தி
3. துரைசாமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. நடராஜன் (இறந்துவிட்டார்)
2. பழனிசாமி
3. சாமிநாதன் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 24.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வெங்கடசுப்பு, B.A., B.L.,அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:–**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது 10 அடி அகல தடத்தின் கீழ் வாதிகள் அமைத்துள்ள பைப்லைன் மூலம் தண்ணீர் எடுத்து பயன்படுத்துவதை இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கானது விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாவா 10 அடி அகல பாதையை பொறுத்து மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது.

ii) மேற்படி உரிமை குறித்து அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படிவீதம் திருத்தம் செய்யாவிட்டால் அசல் வழக்கானது டெக்னிக்கலாக பாதிக்கப்படும். மேற்படிவீதம் திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எனவே இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:—**

i) மனுதாரர்கள் மனு பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) இம்மனுவின் மனுதாரர்களால் அசல் வழக்கானது தென்வடலாக அமைந்துள்ள 10 அடி அகல தடத்தின் கீழ் மனுதாரர்கள் அமைத்துள்ள பைப்லைன் மூலம் தண்ணீர் எடுத்து பயன்படுத்துவதை இடையூறுசெய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரரின் சொத்தான ரீ.ச.182ல் அமைந்துள்ள கிணற்றில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் உரிமையும் உரிமைமூலமும் இல்லை என்றும் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளபடி 10 அடி அகல பாதை அங்கு இல்லை என்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் குறித்து மனுதாரரை குறுக்கு விசாரணை செய்து அசல் வழக்கானது மேற்கொண்டு வாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

iii) இந்நிலையில் மனுதாரர்களால் வழக்குரை வரைபடத்தில் X Y என்று குறிப்பிடப்பட்டுள்ள தென்வடல் பாதையின் உரிமை குறித்து விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரரின் சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

இம்மனுவில் கண்டுள்ள திருத்தல் விபரமானது ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் உள்ளது. இம்மனுவில் கோரியுள்ள திருத்தல் பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது 10 அடி அகல தடத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாவா 10 அடி அகல பாதையை பொறுத்து மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி உரிமை குறித்து அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்ய வேண்டியுள்ளது என்றும் எனவே இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் 2ம் எதிர்மனுதாரரின் சொத்தான ரீ.ச.182ல் அமைந்துள்ள கிணற்றில்

மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் உரிமையும் உரிமைமூலமும் இல்லை என்றும் 2ம் எதிர்மனுதாரரின் சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்து ரீ.ச.182 பொதுக்கிணறு மற்றும் ரீ.ச.181ன் மேற்குகோட்டில் தென்வடலாக அமைந்துள்ள 10 அடி அகல தடத்தின் கீழ் வாதிகள் அமைத்துள்ள பைப்லைன் மூலம் தண்ணீர் எடுத்து தாவா பூமிகளில் விவசாயம் செய்வதற்கு இடையூறாக பைப்லைனை உடைத்தோ அல்லது வேறு எந்த விதத்திலும் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 04.08.2025 அன்று 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 18.08.2025 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 10.10.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் மற்றும் நீ.ம.சா.ஆ.1, 2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 03.11.2025 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 14.11.2025 அன்று இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த திருத்தல் மனுவில் வழக்குரை பரிகாரத்தில்

தாவா சொத்து ரீ.ச.181ன் மேற்கு கோட்டில் தென்வடலாக அமைந்துள்ள 10 அடி அகல தடம் வழக்குரை வரைபடத்தில் X Y என உள்ளதில் வாதிகள் ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனங்கள் ஓட்டி அனுபவித்துக் கொள்ளும் புழங்குரியை பாத்தியம் உள்ளது என்று விளம்புகை செய்தும் என்று சேர்க்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது தாவா சொத்து ரீ.ச.182 பொதுக்கிணறு மற்றும் ரீ.ச.181ன் மேற்குகோட்டில் தென்வடலாக அமைந்துள்ள 10 அடி அகல தடத்தின் கீழ் வாதிகள் அமைத்துள்ள பைப்லைன் மூலம் தண்ணீர் எடுத்து தாவா பூமிகளில் விவசாயம் செய்வதற்கு இடையூறாக பைப்லைனை உடைத்தோ அல்லது வேறு எந்த விதத்திலும் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் தாவா 10 அடி அகல பாதையை பொறுத்து மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளதால் மேற்படி உரிமை குறித்து அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்ய வேண்டியுள்ளது என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

9. வழக்குரை சொத்து விபரத்தை பரிசீலிக்கும்போது அதில் ரீ.ச.182ன் தென்கிழக்கு மூலையில் உள்ள பொது கிணற்றிலிருந்தும், ரீ.ச.181/5ஏ, 5பி பூமியிலுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்தும், ரீ.ச.181ன் மேற்கு பகுதியில் தென்வடலாக செல்லும் 10 அடி அகல பொதுத்தடத்தின் கீழ் அமைந்துள்ள

பைப்லைன் வழியாக தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் பாத்தியம் சகிதம் என்று கண்டுள்ளது.

10. 2ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் கடந்த 24.08.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் வாதிகள் கோரியுள்ள கிணற்று உரிமையானது இப்பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.182 பூமிக்குள் தென்கிழக்கில் அமைந்துள்ள கிணறு தொடர்புடையது என்றும் மேற்படி கிணற்றிடத்தில் வாதிகள் வகையறாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் மேற்படி கிணறானது இப்பிரதிவாதிகள் பூமிக்குள் உள்ளது என்றும் மேற்படி கிணறு அமைந்துள்ள பகுதியில் எவ்வித அடிநில பாத்தியமும் வாதிகளுக்கு இல்லை என்றும் மேற்படி வீதம் ரீ.ச.எண்.181ன் மேற்கோட்டில் எவ்வித தடமும் பைப்லைனும் வழக்குரையில் தெரிவித்துள்ளதுபோல் நிலையில் இல்லை என்றும் வாதிகள் நடைதடமாக 4 அடி அகலத்தில் இருந்து வந்த தடபாகத்தை தங்கள் விருப்பத்திற்கு அகலப்படுத்திக் கொள்ள திட்டமிட்டு தனது ஆவணங்களில் இல்லாத அகலமான 10 அடி அகலத்தை குறிப்பிட்டு வழக்குரை அமைத்துள்ளது உள்நோக்கம் கொண்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

11. மேற்படி 2ம் பிரதிவாதி தரப்பில் 04.08.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தாவா தடம் மற்றும் பைப்லைன் நிலையில் இல்லை என்றும் தாவா கிணற்றில் வாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் தாவா X Y தடத்தை பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள்

இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் அசல் வழக்கானது மனுதாரர்களால் தாவா 10 அடி அகல தடத்தின் அடியில் அமைக்கப்பட்டுள்ள பைப்லைன் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது தாவா 10 அடி அகல தடத்தின் உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்ய வேண்டும் என்று இம்மனுவில் கோரியுள்ள திருத்தல் விபரங்கள் அசல் வழக்கின் அடிப்படைத் தன்மையை மாற்றும் வகையிலோ புதிய வழக்கை தோற்றுவிக்கும் வகையிலோ இல்லை. மேற்படி திருத்தத்தை செய்யும் பட்சத்தில் தான் அசல் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் இந்த திருத்தல் மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு மனுதாரர்கள்/வாதிகள் வசமே உள்ளது.

12. எனவே 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரரின் சொத்தான ரீ.ச.182ல் அமைந்துள்ள கிணற்றில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் உரிமையும் உரிமைமூலமும் இல்லை என்றும் 2ம் எதிர்மனுதாரரின் சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மற்றும் புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும் வகையில் இல்லை என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும்

தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், திருத்தல் மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர்கள் வசமே உள்ளது என்பதாலும், 04.08.2025ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி வழக்குரை திருத்தல் பரிகாரம் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பொறுத்து இரு தரப்பு சாட்சியங்களுக்கு பின்னிட்டு அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானம் செய்ய இயலும் என்பதாலும் மேலே கண்ட விவாதங்களின்படியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது கடந்த 2021ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் 04.08.2025 தேதியிலேயே 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்குரையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு பின்னிட்டு அசல் வழக்குரையில் விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்ய வேண்டி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு ரூ.1,500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) செலவு தொகையாக வரும் 09.03.2026ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 09.03.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் நாள்என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.02 18:54:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.02 18:54:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.